## தலைப்பு 285 – விவசாயத் திணைக்களம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

தலைப்பு 285 – விவசாயத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விவசாயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ)உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் தொடர்பில் ஏற்படும் பாதிப்பின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வர்த்தக முற்பணக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பெல்வெஹர பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிலவிய ரூபா 791,608 தொகை கடன்பட்டோர் மீதியினை ரூபா 79,168 எனக் கணக்கீடு செய்யப்பட்டமையால் கடன்பட்டோர் மீதி ரூபா 712,440 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | கணக்கு மீதிகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ii) | பொலன்னறுவை விதை உற்பத்திப் பண்ணையில் மீளாய்வாண்டிற்குள் கை தவிர்க்கப்பட்டிருந்த பொறிகளுக்குரிய திரண்ட தேய்மானத்தின் பெறுமதி ரூபா 4,638,657 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், அது ரூபா 3,478,042 என ரூபா 1,160,615 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் கணக்கினுள் எடுக்கப்பட்ட பின்னர் சீராக்கம் செய்வதாக | திரண்ட பெறுமானத் தேய்வு சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (iii) | உடரதெல்ல விதை உற்பத்திப் பண்ணையில் மீளாய்வாண்டின் இறுதியில் இருப்புக்களின் மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைய ஏனைய நுகர்வோர் பண்டங்களின் இருப்புக்களின் பெறுமதி ரூபா 968,093 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், நிதி நிலைமை | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இருப்பு பெறுமதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான கூற்றில் ரூபா 1,816,959 எனக் குறிப்பிடப்பட்டு இருந்தமையினால் ஏனைய நுகர்வு பண்டங்களின் இருப்பு ரூபா 848,866 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (iv) | விவசாயத் திணைக்களத்தின் அபிவிருத்திக் கணக்கின் கீழ் அடையாளம் காணப்பட்டிருந்த ரூபா 57,500,314 தொகை பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இருப்பு ஒன்று மீளாய்வாண்டிற்குள் பண்ணை முற்பணக் கணக்கிற்கு மாற்றப்பட்டு மதிப்பீடு செய்யாமல் கிரயத்தின் மீது ரூபா 1,437,507 தொகை மீதி ஒன்று பண்ணை முற்பணக் கணக்கில் ஆண்டின் தேய்மானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | மதிப்பீடு செய்து எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதாக | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (v) | மீளாய்வாண்டில் கைதவிர்க்கப்பட்ட நிலையான சொத்துக்களுக்கு உரித்தான ரூபா 24,364,021 தொகை திரண்ட தேய்மானம், தேய்மான ஒதுக்கீட்டு நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த போதும் திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக நாட்குறிப்பு பதிவொன்று கணக்கீடு செய்யப்படவில்லையென | கைதவிர்க்கப்பட்ட நிலையான சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வு குறித்த கணக்குகளிலிருந்து அகற்றப்பட வேண்டும் |

**(ஆ) கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து மூடும் முற்பணக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 518 (3) இன் பிரகாரம் முற்பண செயற்பாடு மூடப்பட்டதன் பின்னர் அடுத்து வரும் ஆண்டில் கலைத்து விடும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும் எனினும் விவசாயத் திணைக்களத்தின் கீழ் நிலவிய 05 வணிக முற்பண நடவடிக்கைகளை 1991 தொடக்கம் 2002 வரையான காலப்பகுதியில் அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றிற்கு அமைய மூடி விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டு இருந்தது. அவ்வாறு வணிக முற்பணக் கணக்கு மூடப்பட்டு 20 இற்கும் 31 இற்கும் இடைப்பட்ட ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும், கலைத்து விடும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 513 இன் பிரகாரம் கணக்குகள் குழுவின் பரிந்துரை தேவையென்பதாக | நிதிப் பிரமாணம் 518 (3) இன் பிரகாரம் கலைத்து விடும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

**(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக் கூற்றுக்கள் (ஏசீஏ - 6) இன் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று அடையாளம் காணப்பட்டு இருந்த வாகனங்களின் பெறுமதி ரூபா 1,600,904,975 தொகை எனினும், திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களுக்கு அமைய அது ரூபா 1,605,524,742 ஆக இருந்தமையினால் ரூபா 4,619,766 ஆன வேறுபாடு காணப்பட்டது. | இவ்வேறுபாட்டை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிக் கூற்றுக்கள் (ஏசீஏ-6) இன் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்கள் ரூபா 7,119,325,465 ஆகக் காணப்பட்ட போதிலும், பௌதீக ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டிருந்த பெறுமதிக்கு அமைய அது ரூபா 1,809,182,290 தொகை ஆக இருந்தது. அதற்கு அமைய மொத்தம் ரூபா 5,310,143,175 ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. மேலும் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்களின் 1248 சந்தர்ப்பங்கள் மதிப்பீடு செய்து கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை. | கட்டிடங்களின் பெறுமதியை எதிர்காலத்தில் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்கள் சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (iii) | நிதிக் கூற்றுக்கள் (ஏசீஏ-6) இற்கு அமைய நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி காணிகளின் பெறுமதி ரூபா 17,849,002,464 ஆகக் காணப்பட்ட போதிலும், பௌதீக ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டிருந்த பெறுமதிக்கு அமைய அது ரூபா 11,664,574,116 தொகை ஆகக் காணப்பட்டது. அதற்கு அமைய மொத்தம் ரூபா 6,184,428,348 ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. மேலும் திணைக்களத்திற்கு உரித்தான 372 காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | காணியின் பெறுமதியை எதிர்காலத்தில் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |

**(ஈ) முற்பணக் கணக்கு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றுகைக் கூற்றின் பிரகாரம் (ACA - F) மீளாய்வாண்டில் முற்பண வரவுகள் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் முறையே ரூபா 1,348,571,573 தொகை மற்றும் ரூபா 1,294,318,401 தொகை எனக் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் திறைசேரியின் குறிப்புக்களுக்கு அமைய முற்பண பெறுவனவுகள் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் முறையே ரூபா 1,349,780,930 தொகை மற்றும் ரூபா 1,294,573,401 ஆக இருந்தமையால் முற்பண பெறுவனவுகள் ரூபா 1,209,357 ஆலும் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 255,000 ஆலும் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | தரவுகள் சில விடுபட்டமையால் இக்கணக்கீட்டு குறைபாடு ஏற்பட்டிருந்ததாக | திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான குறிப்பு (iv) இன் பிரகாரம் மீளாய்வாண்டின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் மீதி ரூபா 7,251,091 தொகை எனக் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் திறைசேரியின் அச்சுப்பதிப்பு செய்யப்பட்ட SA 92 ஆவணத்திற்கு அமைய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று மீதி ரூபா 15,098,673 ஆகக் காணப்பட்டது. | தொழில்நுட்ப தவறொன்று காரணமாக திறைசேரி அச்சுக் குறிப்புக்களில் 2022 ஆம் ஆண்டிற்குரிய பொறுப்புக்கள் சிகாஸ் நிகழ்ச்சியிலிருந்து நீக்கப்படாமையால் | தேவையான சீராக்கங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு திறைசேரிக்கு அறிவித்தல் வேண்டும். |

**2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| விவசாயத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை யொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் இம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப் பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணிச் செல்வதற்கு வேண்டிய மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

| **அவதானிப்பு** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டுக் கோவையின் I ஆவது தொகுதியின் XVIII ஆம் அத்தியாயத்தின் 193 ஆம் பந்தி | திணைக்களத்தின் 07 பிரிவுகளுக்குரிய 183 உத்தியோகத்தர்கள் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஒரே நிறுவனத்தில் சேவை புரிந்து வந்ததனர். | புதிய ஆட்சேர்ப்புகளின் பின்னர் இடமாற்றல் நடைமுறைக்கு இணங்க இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | செயற்பாட்டுக் கோவையின் சட்டங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### அதிகார மற்ற கொடுப்பனவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நி.பி 753 (2) இன் பிரகாரம் நடவடிக்கைகளை எடுக்காமல் கன்னொருவை தோட்டப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம், ரூபா 1,900,734 தொகை பெறுமதியான ஆய்வுகூட மேசைகளைக் கொள்வனவு செய்யும் போது பொருட்கள் கிடைக்கப்பெற்று இருக்காத வேளையில், களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தரினால் பொருட்கள் கிடைக்கப் பெற்றதாக போலியாகக் குறிப்பிட்டு பொது 219 வழங்கப்பட்டு இருந்தது. 2023 மார்ச் 15 ஆம் திகதி வரையில் உரிய பொருட்கள் கிடைக்கப் பெற்று இருக்கவில்லை என்பதுடன் அதற்காக 2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் எழுதப்பட்ட ரூபா 1,900,734 தொகை பெறுமதியான காசோலை ஒன்று 75 நாட்களாக விரிவாக்கல் கணக்குப் பிரிவில் தேக்கி வைக்கப்பட்டு இருந்தது. | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களை சமர்ப்பிக்கும் போது குறித்த காலப் பகுதியில் பட்டியலைச் சமர்ப்பித்து கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு முடியுமான வகையில் நிறுவனத்தின் செயற்பாடுகளை முறைப் படுத்துவதற்கு உரிய பிரிவுகளுக்கு எச்சரிக்கை கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பொருட்கள் கிடைத்த பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ii) | 03 அரச விதை உருளைக் கிழங்குப் பண்ணைகளுக்காக கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்த 03 Front end loaders களுக்காக 03 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 9,449,925 தொகை செலுத்தப்பட்டு இருந்தது. அதற்கு உரிய காசோலைகள் 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி ஆகும் போது அங்கீகரிக்கப்பட்டு இருந்த போதிலும் போலியான பொது 219 சான்றிதழின் மீது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு இருந்த உரிய உபகரணங்கள் 2023 மார்ச் 30 ஆம் திகதி வரையிலும் போதும் பண்ணைகளுக்கு கிடைக்கப் பெற்று இருக்கவில்லை. | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களை சமர்ப்பிக்கும் போது குறித்த காலப்பகுதியில் பட்டியலைச் சமர்ப்பித்து கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு முடியுமான வகையில் நிறுவனத்தின் செயற்பாடுகளை முறைப்படுத்துவதற்கு உரிய பிரிவுகளுக்கு எச்சரிக்கை கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பொருட்கள் கிடைத்த பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும் |

**2.5 வங்கி கணக்கு செயற்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் வங்கிக் கணக்கிற்கு உரிய வகையில் மீளாய்வாண்டில் ஆகஸ்ட் தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியில் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக எழுதப்பட்ட ரூபா 10,309,346 பெறுமதியான 26 காசோலைகள் உரிய பணம் பெறுவனருக்கு வழங்கப்படாமல் பரீட்சிக்கப்பட்ட தினமாகிய 2023 மார்ச் 15 ஆம் திகதி வரையிலும் கணக்குகள் பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. | உறுதிச்சீட்டுக்களில் உள்ள குறைபாடுகள் பூர்த்தி செய்து விரைவில் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | குறித்த செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விதை உற்பத்திப் பண்ணையின் பிரதான நோக்கம் தரமான விதை உற்பத்தி எனினும், முளைத்தல் வீதம் 50-75 சதவீதம் வரையான விதைகளை அனுமதிக்கப்பட்ட விலையில் இருந்து நூற்றிற்கு 50 சதவீதம் குறைத்தும் முளைத்தல் வீதம் 25 - 50 சதவீதம் வரையான விதைகளை அனுமதிக்கப்பட்ட விலையில் இருந்து நூற்றிற்கு 75 சதவீதம் குறைத்தும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு இருந்தது. | முளைக்கும் சதவீதம் குறைந்த விதைகள் செயற்திட்டங்களுக்காக மாத்திரம் வழங்கப்பட்டதாக | விவசாய நடவடிக்கைகளுக்காக முளைத்தல் வீதம் அதிகமுள்ள விதைகள் வழங்கப்பட வேண்டும். |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குண்டசாலை அரச விதை உற்பத்திப் பண்ணைக்கு தேவையான விதைகளை உரிய காலப் பகுதிக்குள் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ளாமையினால் 04 போகங்களில் 16 சந்தர்ப்பங்களில் 07 பயிர் வகைகளுக்கு உரிய வகையில் எதிர்பார்க்கப்பட்ட 4810 கி.கிராம் விதைகளை உற்பத்தி செய்ய முடியாமல் போயுள்ளது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | எதிர்பார்க்கப்பட்ட விதை உற்பத்தி இலக்கை மட்டத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மஹாஇலுப்பல்லம விதை உற்பத்திப் பண்ணையில் 2019 ஆம் ஆண்டில் சிறு போகம் தொடக்கம் 2022 சிறு போகம் வரையான 07 போகங்களில் எதிர்பார்க்கப்பட்ட மொத்த விதை நெல் உற்பத்தி 3,067,620 கி.கிராம் ஆகக் காணப்பட்ட போதிலும், மேற்படி காலப்பகுதிக்குள் ரூபா 86,001,891 தொகையினை செலவிட்டு 1,400,265 கி.கிராம் விதை நெல் எனும் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியில் 46 சதவீதம் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டு இருந்தது. அவ்வாறே மேற்படி காலப்பகுதிக்குள் எதிர்பார்க்கப்பட்ட மொத்த மேலதிக உணவுப் பயிர்களின் விதை உற்பத்தி 51,040 கி.கிராம் எனினும், ரூபா 23,875,563 தொகையினை செலவழித்து மேலதிக உணவுப் பயிர்களின் விதை 10,823 கி.கிராம் என்ற எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியில் 21 சதவீதம் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டு இருந்தது. | எரிபொருள் நெருக்கடி, இரசாயன பசளை கிடைக்காமை, கிருமி நாசினிகள் சந்தையில் இல்லாமை, நீர் வழங்கல் சிக்கல் போன்றவை காணப்பட்ட காரணத்தினால் இலக்கிடப்பட்ட உற்பத்தியை அடைவதற்கு முடியாமல் இருந்ததாக | இலக்கிடப்பட்ட உற்பத்தியை அடைவதற்கு முடியாமல் இருந்தமைக்கான காரணிகளை குறைத்து இலக்கினை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1947 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 224 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டு விவசாயத் திணைக்களத்திற்கு உரித்தான 10 நிறுவனங்களுக்கு உரிய 2191 ஹெக்டேயர் நிலப் பரப்பு முறையாக கையேற்கப்பட்டு இருக்கவில்லை. | காணியை கையேற்பதற்கு எடுக்க வேண்டிய எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | விவசாயத் திணைக்களத்திற்கு உரித்தான 10 நிறுவனங்களில் நிலவும் மொத்தம் ரூபா 116,976,640 பெறுமதியான 261 இயந்திரங்கள் மற்றும் கருவிகள் 01 முதல் 07 வருடங்கள் வரையான காலப்பகுதி வரை பயன்படுத்தாது செயலற்று மற்றும் குறைப் பயன்பாட்டில் இருந்தது. | காணப்படும் நிதிஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கைதவிர்ப்பு நிலைமைகளில் உள்ள இயந்திரங்களை கைதவிர்ப்பு செய்வதாக | விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய இயநிரங்களை திருத்தி பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | விவசாயத் திணைக்களத்திற்கு பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் கருத்திட்டங்களின் மூலம் கிடைக்கப்பெற்று இருந்த 09 நிறுவனங்களில் காண்படும் 23 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 46 அலகுகளுக்கு உரிய கைவினை டிரக்டர்கள் மற்றும் 105 டிரக்டர்கள் என்பன 2022 நவெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் விவசாயப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டு இருக்கவில்லை. | பதிவுசெய்து குறித்த இலக்க தகடுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | அனைத்து வாகனங்களையும் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் 72 வாகனங்கள் மற்றும் 183 மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றிற்காக மீளாய்வாண்டிற்காக வருமான அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் வருமான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | திணைக்களத்தின் அனைத்து வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | திணைக்களத்தின் 11 அலகுகளுக்கு உரிய கைவினை உழவு இயந்திரங்கள், உழவு இயந்திரங்கள் மற்றும் 40 இலை அரைக்கும் இயந்திரங்கள் என்பன கைதவிர்ப்பதற்காக அனுப்பப்பட்டு இருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டு வரையிலும் அதன் கழித்து ஒதுக்கும் வேலைகள் கைதவிர்க்கப்பட்டு இருக்கவில்லை | எதிர்காலத்தில் கைதவிர்ப் பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக | வாகன கைதவிர்ப்பு நடவடிக்கை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டும். |
| (ஊ) | திணைக்களத்தின் 72 அலகுகளுக்கு உரிய வகையில் 396 அரச இல்லங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | கிடைக்கும் நிதிஏற்பாடுகளின் பேரில் திருத்த வேலைகளைச் செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதாக | திருத்த வேலைகளைச் செய்து பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | படைப் புழுக் கருத்திட்ட ஆய்வு மற்றும் அது தொடர்பாக கண்டறிவதற்காக விவசாய இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையத்திற்கு ரூபா 6,395,847 தொகையினைச் செலுத்தி 2019 திசெம்பர் 20 ஆம் திகதி ட்ரோனர் கெமராக் கட்டமைப்பு ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு இருந்தது. எனினும் இந்தக் கெமராக் கட்டமைப்பினால் எதிர்பார்க்கப்பட்ட பணியினை நிறைவேற்றிக் கொள்வதற்காக ட்ரோன் மென்பொருளினை | கருத்து தெரிவிக்கவில்லை | தேவைகளை பூர்த்தி செய்து குறித்த முறைமையை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தாபிப்பதற்காக தேவையான டெஸ்க்டொப் கணினி ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்கு இயலாமல் சென்றமையின் காரணமாக இந்தக் கெமரா 03 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக பயனின்றிக் காணப்பட்டது. | | |

### 3.4 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டு இருந்த நிதி பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாது 1976 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவும் ரூபா 104,443,743 பெறுமதியான நட்டங்கள் மற்றும் இழப்புக்களுக்கு உரிய 383 நிகழ்வுகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | நட்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் களிடமிருந்து அறவீடு செய்தல் பூரணமாக இல்லாமை நி.பி 109 இன் கீழ் பொது 285 அறிக்கை அங்கீகரிக்கப்படாமை காரணம் என்பதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1981 நவம்பர் 02 ஆம் திகதிய மற்றும் 165/2 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் கொழும்பு, கட்டுநாயக்க, திருகோணமலை, தலை மன்னார், காலி மற்றும் காங்கேசந்துறை துறைமுகங்களில் தாவரத் தடுப்புக காப்புச் சேவை அலகு ஒன்று தாபிக்கப்பட்டு இருக்கவில்லை. | துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சிடமிருந்து வேண்டுகோளொன்று கிடைக்கவில்லையென்பதாக | வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | குண்டசாலை அரச விதை உற்பத்திப் பண்ணைக்கு உரிய 6656 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் மூலம் வேறாக்கப்பட்டு இருந்த 1.5 ஏக்கர்களுக்கு உரிய 21 காணித் துண்டுகளை அத்துமீறிக் குடியேறியவர்கள் பயன்படுத்தி உள்ளதுடன் அதில் 2 துண்டுகளில் நிரந்தர நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. | காணிப் பகுதியை திணைக்களத்திற்கு கையேற்கும் நடவடிக்கைககள் இடம்பெற்று வருகின்றது. | அத்துமீறிய குடியிருப்பாளர்கள் அகற்றப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | குண்டசாலை அரச விதை உற்பத்திப் பண்ணையில் 11 சிறிய அளவிலான குளங்களில் சேற்று மண்ணை அகற்றும் தேவைப்பாடு 2019 ஆம் ஆண்டு தொடக்கம் அடையாளம் காணப்பட்டு 04 வருட காலம் கழிந்து இருந்த போதிலும், இந்தக் குளங்களில் வண்டல் மண்ணை அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | வண்டல் மண்ணை அகற்றுவதற்கு நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுப்பதாக. | திட்டமிட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஈ) | மஹாஇலுப்பல்லம அரச விதை உற்பத்திப் பண்ணையில் சேதனப் பசளை உற்பத்திக்காக கடந்த வருடத்தின் திசெம்பர் மாதம் ரூபா 1,709,800 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 03 சொப்பர் இயந்திரங்கள் வழங்கப்பட்டு இருந்த போதிலும் 2023 சனவரி 12 ஆந் திகதி வரையிலும் இந்த இயந்திரங்கள் சேதனப் பசளைத் தயாரிப்பிற்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக | குறித்த இயந்திரங்களை நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்த வேண்டும். |
| (உ) | மஹாஇலுப்பல்லம பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உரித்தான 06 களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டு இருந்த 273508 கிலோ கிராம் விதை நெல்லில் 239991 கிலோ கிராம் விதை நெல் அதாவது மொத்த விதையின் அளவில் 88 சதவீதம் தகுதியற்ற விதைகள் என விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு இருந்தது. | 09 மாதங்களை விட விதை காலம் கடந்தமையால் முளைக்கும் திறன் குறைவடைந்துள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையின் பேரில் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | விதைகள் காலாவதியாவதற்கு முன்னர் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட் வேண்டும். |
| (ஊ) | திணைக்களத்தின் 54 அலகுகளுக்கு இணைக்கப்பட்டு இருந்த கை உழவு இயந்திரங்கள், உழவு இயந்திரங்கள் மற்றும் 139 இலை அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் 32 அலகுகளுக்கு இணைக்கப்பட்டு இருந்த 84 மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாயத் திணைக்களத்தின் 303 ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியக் கோப்புக்கள் வேலை பூர்த்தி செய்யப்படாமை காரணமாக ஓய்வூதியம் செலுத்த முடியாமல் காணப்பட்டன. | ஓய்வூதிய கோவைகளில் குறைபாடுகள் மற்றும் தற்போதய நிலை தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக | ஓய்வூதிய கோவைகளின் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |